பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**21 05 2026** **THURSDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் இன்று மாலை புதுதில்லியில் நடைபெறுகிறது.

**2.** இந்தியா — கொரியா இடையேயான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு வரலாற்று சிறப்புமிக்கது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

**3.** தமிழக அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியை சேர்ந்த இருவர் உட்பட **23** பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

**4.** ஜார்கண்டில் **27** நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

**5.** மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashmita Chaliha** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

.... இனி விரிவான செய்திகள் ...

<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் அமைச்சர்கள் பங்கேற்கும் கூட்டம் இன்று மாலை புதுதில்லியில் நடைபெறுகிறது.

மத்திய அமைச்சர்கள் மற்றும் இணையமைச்சர்கள் அனைவரும் இதில் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நடப்பாண்டில் முதல் முறையாக பிரதமர் அனைத்து அமைச்சர்களுடனும் ஆலோசனை மேற்கொள்ள உள்ளதாக அவர் மேலும் கூறுகிறார்.

அரசு திட்டங்களின் செயலாக்கம் மற்றும் புதிய திட்டங்களை வகுப்பது குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

<<<<<>>>>>>

இந்தியா — கொரியா இடையேயான பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு வரலாற்று சிறப்புமிக்கது என்று அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

அரசு முறைப் பயணமாக தென்கொரியா சென்றுள்ள அவர், அந்நாட்டு அமைச்சர் திரு **Kwon Oh Eul** -யுடன் இணைந்து சியோலில் உள்ள **Imjingak** பூங்காவில் இந்திய போர் நினைவுச் சின்னத்தை திறந்துவைத்து பேசினார்.

கொரியாவின் அமைதிக்கான இந்தியாவின் பங்களிப்பு இன்றியமையாதது என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு **Kwon Oh Eul,** கொரிய போரின்போது இந்தியா அளித்த பங்களிப்பு பாராட்டுதலுக்குரியது என்று குறிப்பிட்டார்.

<<<<<>>>>>>

நெடுஞ்சாலைகள் முறையாக பராமரிக்கப்படுவது மற்றும் திட்டங்களை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சாலை போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி அறிவுறுத்தியுள்ளார்.

திரிபுரா, அருணாச்சலப்பிரதேசம் மற்றும் சிக்கிமில் மேற்கொள்ளப்பட்டுவரும் நெடுஞ்சாலைத் திட்டப்பணிகள் குறித்து புதுதில்லியில் அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த காலத்திற்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு நிதின்கட்கரி தெரிவித்தார்.

<<<<<>>>>>>

காசநோய் ஒழிப்புக்கான உலகின் மிகப்பெரிய பரிசோதனை இயக்கம் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக ஜெனிவா சென்றுள்ள அவர், உலக சுகாதார அமைப்பில் நடைபெற்ற இதுதொடர்பான அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

இந்த இயக்கத்தின்கீழ், வீடு வீடாக சென்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

இதற்காக அதிநவீன பரிசோதனை கருவிகள் பயன்படுத்தப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

எபோலா வைரஸால் பாதிக்கப்பட்ட காங்கோ, உகாண்டா மற்றும் தெற்கு சூடானில் பயணம் மேற்கொண்டு நாடு திரும்பியவர்கள் காய்ச்சல், தலைவலி உள்ளிட்ட அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவர்களை அணுகுமாறு மத்திய அரசின் பொது சுகாதார சேவைகள் துறை அறிவுறுத்தியுள்ளது.

பயணம் மேற்கொண்ட 21 நாட்களுக்குள் இந்த அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவர்களை அணுகி உரிய சிகிச்சை மேற்கொள்ளுமாறும் அந்த துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக விமான நிலையங்களில் மருத்துவத்துறை அதிகாரிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

அழகு சாதன பொருட்களை ஊசி வாயிலாக செலுத்திக்கொள்ள மத்திய மருந்து கட்டுப்பாட்டு வாரியம் தடை விதித்துள்ளது.

தனி நபர்களோ, அழகுகலை நிபுணர்களோ, அழகுகலை மருத்துவமனைகளோ ஊசி வாயிலாக அழகு சாதன பொருட்களை செலுத்தக் கூடாது என்று மருந்து கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பயன்பாடு கண்டறியப்பட்டால், அது குறித்த புகார்களை Cosmetic@cdsco.nic.in என்ற மின்னஞ்சலில் பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

பயணிகளின் நலனுக்கு ரயில்வே உயர்முன்னுரிமை அளித்துள்ளதாக அத்துறைக்கான இணையமைச்சர் திரு ரவ்னீத் சிங் கூறியுள்ளார்.

சண்டிகர் அருகே நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பயணிகளின் பாதுகாப்பிற்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

ரயில் விபத்துகளை தடுப்பதற்காக நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு ரவ்னீத் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் நினைவுதினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி, புதுதில்லியில் உள்ள அன்னாரது நினைவிடமான வீர்பூமியில் காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி சோனியாகாந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி மற்றும் பலர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

தமிழகத்தின் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள நினைவிடத்திலும் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

<<<<<>>>>>>

தமிழக அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சியை சேர்ந்த திரு. விஸ்வநாதன், திரு. ராஜேஷ் குமார் உட்பட 23 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

சென்னையில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் அவர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

தவெக-வை சேர்ந்த தூத்துக்குடி சட்டப்பேரவை தொகுதி உறுப்பினர் திரு. ஸ்ரீநாத், அவிநாசி தொகுதியின் திருமதி கமலி, குமாரப்பாளையம் தொகுதியின் திருமதி விஜயலட்சுமி, காஞ்சிபுரம் தொகுதியின் திரு. ரஞ்சித் குமார், கும்பகோணம் தொகுதியின் திரு. வினோத், திருவாடானை தொகுதியின் திரு. ராஜீவ், கடலூர் தொகுதியின் திரு. ராஜ்குமார், அரக்கோணம் தொகுதியின் திரு. காந்திராஜ், ஒட்டப்பிடாரம் தொகுதியின் திரு. மதன் ராஜா, ராஜபாளையம் தொகுதியின் திருமதி ஜெகதீஷ்வரி, ஈரோடு கிழக்கு தொகுதியின் திரு. விஜய்பாலாஜி, ராசிபுரம் தொகுதியின் திரு. லோகேஷ் தமிழ்ச்செல்வன், சேலம்-தெற்கு தொகுதியின் திரு. விஜய் தமிழன் பார்த்திபன், ஸ்ரீரங்கம் தொகுதியின் திரு. ரமேஷ், வேளச்சேரி தொகுதியின் திரு.ஆர் குமார்,

ஸ்ரீபெரும்புதூர் தொகுதியின் திரு. தென்னரசு, கோயம்புத்தூர் வடக்கு தொகுதியின் திரு. சம்பத் குமார், அறந்தாங்கி தொகுதியின் திரு. முகமது பர்வேஸ், தாம்பரம் தொகுதியின் திரு. சரத்குமார், ஆர்கே நகர் தொகுதியின் திரு. மரியவில்சன், கிணத்துக்கடவு தொகுதியின் திரு. விக்னேஷ் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு விஜய் உட்பட மாநில அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதற்கிடையே, அமைச்சர்களுக்கான இலாக்காக்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

திரு ஸ்ரீநாத்துக்கு மீன்வளத்துறையும், திருமதி கமலிக்கு கால்நடை பராமரிப்புத்துறையும், திரு ரஞ்ஜித் குமாருக்கு வனத்துறையும், திரு வினோத்திற்கு வேளாண்துறையும், திருமதி விஜயலட்சுமிக்கு பால்வளத்துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு செங்கோட்டையன் வசமிருந்த நிதித்துறை திரு மரிய வில்சனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு செங்கோட்டையன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சராக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, தமிழகத்தில் கூட்டணி ஆட்சி அமைந்துள்ளதன் மூலம், அரசியலில் புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு பிரவீன் சக்ரவர்த்தி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 59 ஆண்டுகளுக்கு பிறகு காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர்கள் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளதாகவும், இது வரலாற்று சிறப்புமிக்கது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

அஸ்ஸாம் சட்டப்பேரைவை கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பதவியேற்று வருகின்றனர்.

இடைக்கால பேரவைத் தலைவர் திரு **Chandra Mohan Patowary** புதிய உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்து வருகிறார்.

முதலாவதாக அஸ்ஸாம் முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா சட்டப்பேரவை உறுப்பினராக பதவியேற்றார்.

<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் **Falta** சட்டப்பேரவைத் தொகுதியில் மறு வாக்குப்பதிவு தற்போது அமைதியாக நடைபெற்று வருகிறது.

காலை **7** மணிக்கு தொடங்கிய இந்த வாக்குப்பதிவு மாலை **6** மணிவரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நண்பகல் நிலவரப்படி **42** சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலின்போது அந்த தொகுதியில் முறைகேடுகள் நடைபெற்றதாக பெறப்பட்ட புகாரையடுத்து, வாக்குப்பதிவு ரத்து செய்யப்பட்டது.

<<<<<>>>>>>

ஜார்கண்டில் **27** நக்சலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

ராஞ்சியில் காவல்துறையின்முன் இவர்கள் சரணடைந்ததாக அம்மாநில காவல்துறை தலைவர் திரு **Tadasha Mishra** செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சரணடைந்தவர்களுக்கான மறுவாழ்வினை மாநில அரசு உறுதி செய்யும் என்றும் அவர் கூறினார்.

<<<<<>>>>>>

மேற்குவங்கத்தில் உள்ள மதசராக்களில் இறை வணக்கத்தின்போது வந்தேமாதரம் பாடல் பாடுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

மதசரா கல்வித்துறை இதற்கான சுற்றிக்கையை வெளியிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Ashmita Chaliha** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **21-13, 21-16** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Goh Jan Wei** -ஐ வென்றார்.

---------------------

லாகோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Payas Jain, Mudit Dani, Sanil Shetty** ஆகியோர் பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-------------

**19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்கேற்பதற்கான இந்திய அணி கொழும்பு செல்ல உள்ளது.**

**மூன்று ஒருநாள் மற்றும் நான்கு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இரு அணிகளும் பங்கேற்கின்றன.**

**முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜூலை மாதம் 4-ஆம் தேதியும், இரண்டாவது போட்டி 6-ஆம் தேதியும், மூன்றாவது போட்டி 9-ஆம் தேதியும் Hambantota-வில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**<<<<<END>>>>>>**

**(C/O)**

**21 05 2026 12 40 ஆந்திரா — எரிசக்தி**

**தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு ஆந்திர அரசு ஊக்கம் அளித்து வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.**

**சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்கென ஒருங்கிணைந்த கொள்கை வகுக்கப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.**

இதன்மூலம் பத்து லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் கிடைக்கப்பெறும் என்றும் திரு சந்திரபாபு நாயுடு நம்பிக்கை தெரிவித்தார்.

கார் — சி                                                                 தில்லி - 6